செ.வெ.எண்: 911/2017 நாள்: 05.12.2017

**கன்னியாகுமரி மாவட்டம்**

**ஓகி புயலால் பாதிக்கப்பட்ட பூத்துறை,தக்கலை டவுன், ஆளுர், மணிலிக்கரை போன்ற பகுதிகளில் மின்விநியோக பணிகளை, மின் உற்பத்தி மற்றும் பகிர்மானம் தலைவர் திரு. சாய்குமார் இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு.**

---

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 29.11.2017 அன்று இரவு பெய்த கன மழை மற்றும் சூறைக்காற்றினால், மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மரம் பெயர்ந்து விழுந்ததால் மின்கம்பங்கள் சேதமடைந்தன.

இப்பணிகளை, போர்கால அடிப்படையில் மேற்கொள்ள, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதின்பேரில், மின்உற்பத்தி மற்றும் பகிர்மானம் தலைவர் திரு. சாய்குமார் இ.ஆ.ப., அவர்கள், இன்று (05.12.2017) கோதநல்லூர், பூத்துறை, தக்கலை டவுண், ஆளுர், மணலிகரை, பத்மநாபபுரம், இரணியல் மற்றும் கூட்டு குடிநீர் திட்டம், பகுதிகளில் 364 டிரான்ஸ்பார்மர் மூலமாக மின் விநியோகம் செய்யும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

முன்னதாக, ஈட்டவிளையில் 15 கம்பங்கள் பழுதடைந்துள்ளன. அதனை மாற்றி, புதிய மின்கம்பங்கள் அமைக்கப்பட்டு, மின்விநியோகிக்கும் பணிகளை பார்வையிட்டார். வில்லுகுறி ஊராட்சி, வெள்ளாட்ச்சிவிளை போன்ற பகுதிகளில் நடைபெற்று வரும் பணிகளை நேரில் ஆய்வு செய்து, இப்பணிகளை விரைவில் முடிக்க அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது, மின் தொடர்அமைப்பு இயக்குநர் திரு. செந்தில்வேலன், மின் பகிர்மான இயக்குநர் திருமதி ஹெலன், செயற்பொறியாளர் கணேசன் உடனிருந்தனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்.கன்னியாகுமரி மாவட்டம்

---